MCOP: 283/2017

Date: 09.02.2023.

ம.சா.1 ஜெயகுமார், த/பெ குமரபெருமாள்

2 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணிந்திருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்ததாக தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ-4 காப்பீட்டுச் சான்றிதழ் போலியானது என்றாலும், 1 வது எதிர்மனுதாரர் அவரது வாகனமான TN72D6591 மகேந்திரா வேனை 2 வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ-4 காப்பீட்டுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டு எண் மோட்டார் இருசக்கர வாகனத்திற்கு வழங்கப்பட்ட காப்பீட்டுச் சான்றிதலுக்குரியது என்றால் சரியல்ல.

(கற்றறிந்த 2 வது எதிர்மனுதாரர் வழக்கறிஞர் சில ஆவணங்களை வைத்து சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்றும், அதற்கு கால அவகாசம் வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/- R. Selvakumar
Chief Judicial Magistrate,
Thoothukudi.